கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

# DTAS 3103 Dramatic Literature (Selected texts from Indian and Tamilian tradition)

LIBRARY
10 JUN 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

---

01. காளிதாசரின் "அபிஞ்ஞான சாகுந்தலம்" சமஸ்கிருத நாடக மரபில் தனித்துவமான இடத்தினை வகிக்கின்றது.
    (அ) இந்நாடகத்தின் கட்டமைப்பினை எடுத்துக்காட்டுக்கள் மூலம் தெளிவுபடுத்துக.
    (ஆ) இந்நாடகத்திற்கு 'சாபம்' எனும் பெயர் எந்தளவிற்குப் பொருத்தமானது என்பதை ஆராய்க.

02. "ஒரு இனத்தினர் இன்னுமொரு இனத்தினர் மீது தமது மதக் கொள்கைகளைத் திணிப்பதற்குப் பல வகையான உத்திகளைக் கையாள்கின்றனர்." இக்கூற்றினை இரணியன் அல்லது இணையற்ற வீரன் எனும் நாடகத்தை மையமாகக் கொண்டு ஆராய்க.

03. நொண்டி நாடகம் தென்மோடிக் கூத்து வழமையான கூத்து மரபில் இருந்து வேறுபட்டது.

    (அ) நொண்டி எனும் பாத்திரவார்ப்பு
    (ஆ) இன்றைய சமூக நிலைமை படம்பிடித்துக் காட்டப்படும் முறைமை ஆகியவற்றைத் தெளிவுபடுத்துக.

04. போராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் 'துரோகிகள்' நாடகம் ஈழத்துத் தமிழ் அரசியல் நாடகங்களின் முன்னோடியாகும்.
    (அ) இந்நாடகத்தில் மொழி கையாளப்பட்ட முறைமை பற்றிச் சுருக்கமாகத் தருக.
    (ஆ) ஈழத்தமிழரின் அரசியல் நிலைப்பாடு 1950 களில் இந்நாடகத்தில் எவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெளிவுபடுத்துக.

05. "சிறுவர் நாடகம் சிறுவர்களின் மகிழ்ச்சி, அவர்களுக்கான படிப்பினை ஆகியவற்றைக் கொண்டு உருவாக்கப்படும் படைப்புக்களாகும்." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை பேராசிரியர் சி.மௌனகுருவின் "தப்பி வந்த தாடியாடு" எனும் சிறுவர் நாடகத்தினை மையமாகக் கொண்டு விளக்குக.

06. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "அன்னை இட்ட தீ" எனும் நாடகத்தில் வெளிக்கொணரப்படும் யுத்தத்தின் மூலமான அவலங்களினை எடுத்துக் காட்டுக்களின் உதவியுடன் விபரிக்குக.